| | | |
|---|---|---|
| O.S No. | : | 171/218 |
| DATE | : | 07.11.2025 |
| **பெயர்** | : | **குமாரசாமி** |
| **தந்தை பெயர்** | : | |

**நீதிமன்ற குறிப்பு** – சாட்சிக்கு காது கேட்பதில் பிரச்சனை இருப்பதால் அவர் காது கேட்கும் கருவி பொருத்தியுள்ளார்.

**வாதி தரப்பு பி.வா. சா.1 குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் எனது பகுதி மட்டும் தான் எனக்கு தெரியும். தாவா சொத்தின் பின்பகுதியில் 62 அடி நீளமும், 32 அடி அகலமும் கொண்டது. தொடர்ந்து முன்பகுதியில் கிழக்கு பக்கம் 25 அடி நீளமும், 32 அடி அகலமும் பத்திரப்படி உள்ளது. மேற்கில் 16 அடி நீளமும், 32 அடிக அகலமும் அதே பத்திரத்தில் உள்ளது. 62 அடிக்கு 32 அடி உள்ள இடத்தை எனது தந்தை 1961ல் கிரையம் (பி.வா.சா.ஆ.1) வாங்கினார். 1971ல் 25 அடிக்கு 32 அடி அகலம் உள்ள இடத்தை கிரையம் வாங்கினார். அது பி.வா.சா.ஆ–6. 1971ல் கிரையம் வாங்கிய பத்திரத்தின் அடிப்படையில் தான் தெருபக்கம் உள்ள கொரடும், திண்ணையும் கிரையம் பெறப்பட்டது. மேற்கில் சொல்லும் 16 அடிக்கு 32 அடி சொத்தும் 1971 கிரைய பத்திரம் (பி.வா.சா.6)அடிப்படையில் தான் பெறப்பட்டது.

2. 1982ல் எங்களுக்குள் இருந்த பிரச்சனை சம்மந்தமாக எனது தந்தையும் வாதிகளும் சேர்ந்து பாகப்பிரிவினை (பி.வா.சா.–7) செய்தார்கள் அதில் கொரடும், திண்ணையும் உட்படுத்தப்பட்டது. எனது தந்தை கிரையம் வாங்கிய காலத்தில் புழக்கடை பாகத்தில் 1971 ஆவணத்தின் முன்னிலைக்கு கிரையம் வாங்கினோம். 1971 கிரையம் வாங்கியதில் 16 அடிக்கு 32 அடி என்பது புழக்கடை பாகம் ஆகும். 1971ற்கு முன்பு புழக்கடை பாகம் யாரிடம் இருந்தது என்று எனக்கு தெரியாது. வாதிகள் எனது சொத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ளார்கள். எனது சொத்திற்கும் வாதிகளின் சொத்திற்கும் கீழண்டை பக்கம்

தான் தெரு உள்ளது. தெருவில் இருந்து முன்பக்க பாகம் வாதிகள், பின்புறம் நாங்கள் உள்ளோம்.

3. எனது பாகத்திற்கும், வாதிகள் பாகத்திற்கும் செல்வதற்கு 4 அடி நாராசம் தெற்கில் உள்ளது. அந்த 4 அடி நாராசத்தின் வழியாக தான் நாங்களும் வாதிகளும் எங்களது வீட்டிற்கு செல்கிறோம். பத்திரப்படி நாராசம் 4 அடி என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் 1976ல் கிரையம் வாங்கினார்கள். ஆதியில் மொத்த சொத்துக்களும் ஒரே நபருக்கு உரித்தானது, பின்னர் பகுதிகளாக விற்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.